MAY 2022

U/ID 22215/UCZ1A/ UCW1A/UCY1A/UCV1B

Time : Three hours Maximum : 75 marks

PART A — (10 × 2 = 20 marks)

Answer any TEN questions.

1. List out any two objectives of depreciation.

   தேய்மானத்தின் நோக்கங்கள் ஏதேனும் இரண்டினை வரிசைப்படுத்துக.

2. What are adjusting entries?

   சரிகட்டும் பதிவுகள் என்றால் என்ன?

3. What do you mean by non-trading concerns?

   வியாபார நோக்கமற்ற அமைப்புகள் குறித்து நீவிர் அறிவது என்ன?

4. What is Receipts and Payment A/c?

   பெறுதல் செலுத்துதல் கணக்கு என்றால் என்ன?

5. How do you calculate interest under the average due date method?

   சராசரி தவணை நாள் முறையில் வட்டியை எவ்வாறு கணக்கிடுவாய்?

6. Define Account current.

   நடப்பு கணக்கு வரையறு.

7. What is sale (or) return?

   விற்பனை அல்லது திருப்பம் என்றால் என்ன?

8. What is Average clause?

   சராசரி ஷரத்து என்றால் என்ன?

9. Explain the written down value method of depreciation.

   குறைந்த செல் முறை தேய்மானம் பற்றி விளக்குக.

10. What is depreciation?

    தேய்மானம் என்றால் என்ன?

11. State any two features of single entry system.

    ஒற்றைப் பதிவு முறையின் சிறப்புயல்புகள் ஏதேனும் இரண்டினை தருக.

12. What is networth method?

    நிகர மதிப்பு முறை என்றால் என்ன?

PART B — (5 × 5 = 25 marks)

Answer any FIVE questions.

13. Prepare trading account of Archana for the year ending 31.12.2016 from the following information :

	Rs.
Opening stock	80,000
Purchases	8,60,000
Freight inward	52,000
Wages	24,000
Sales	14,40,000
Purchases returns	10,000
Sales returns	3,16,000
Closing stock	1,00,000
Import duty	30,000

31.12.2016 பின்வரும் தகவல்களிலிருந்து அர்ச்சனா அவர்களின் வியாபார கணக்கை தயார் செய்க.

	ரூ.
ஆரம்ப சரக்கிருப்பு	80,000
கொள்முதல்	8,60,000
உள் ஏற்றுக்கூலி	52,000
கூலிகள்	24,000
விற்பனை	14,40,000
கொள்முதல் திருப்பம்	10,000
விற்பனை திருப்பம்	3,16,000
இறுதி சரக்கிருப்பு	1,00,000
இறக்குமதி வரி	30,000

14. A Golf club was been kept its account on cash basis and the figures for 2007 are given below, you are required to prepare Receipts and Payments A/c for the year.

	Rs.
Entrance fees	2,500
Subscription received	19,800
Green fees received	600
Expenses paid	27,250
Surplus on bar a/c	7,500
Secretary's honorarium	1,500
Cash in hand (1.1.2007)	2,350
Locker rent received	500
Cost of investment bought during the year	1,100

கோல்ப் கிளப் தனது கணக்கு ஏடுகளை ரொக்க அடிப்படைப் பராமரிக்கின்றது. பின்வரும் 2007–ம் வருடத்திற்கு நடவடிக்கையை வைத்து பெறுதல் செலுத்துதல் கணக்கு செய்க.

	ரூ.
நுழைவுக் கட்டணம் பெற்றது	2,500
சந்தா பெற்றது	19,800
பசுமை கட்டணம் பெற்றது	600
செலுத்திய செலவு	27,250
பார் கணக்கின் உபரி	7,500
செயலரின் மதிப்பு ஊதியம்	1,500
1.1.2007 அன்று கையிருப்பு ரொக்கம்	2,350
பாதுகாப்பு பெட்டக வாடகை பெறப்பட்டது	500
கொள்முதல் முதல் செய்யப்பட்ட முதலீட்டு தொகை	1,100

15. Sheela drew the following Bills of exchange on Mala during the year 2008 :

Date	Amount	Term
12th January	500	2 months
14th February	300	2 months
20th March	1,000	1 month
4th April	500	1 month
15th May	600	2 months

Find out Average due date.

2008–ம் ஆண்டு பின்வரும் தகவல்களிலிருந்து சீலா எழுதித்கொடுத்த மாற்றுச்சீட்டு மாலா பின்வருமாறு

தேதி	தொகை	காலம்
	ரூ.	
ஜனவரி 12	500	2 மாதம்
பிப்ரவரி 14	300	2 மாதம்
மார்ச் 20	1,000	1 மாதம்
ஏப்ரல் 4	500	1 மாதம்
மே 15	600	2 மாதம்

சராசரி தவணை நாள் கண்டுபிடி.

16. Explain the different methods of computing interest in Account current.

நடப்பு கணக்கின் வட்டியை கணக்கிடும் பல்வேறு முறைகளை விளக்குக.

17. On 1.1.2001 machinery was purchased for Rs. 3,00,000 on 31.1.2001 the machinery was sold for Rs. 2,50,000. Rate of depreciation is 20% on Straight line method. Prepare Machinery Account.

1.1.2001–ல் ரூ. 3,00,000 மதிப்புள்ள இயந்திரம் வாங்கப்பட்டது. அது 31.1.2001 அன்று ரூ. 2,50,000–க்கு விற்பனை செய்யப்பட்டது. தேய்மானம் விகிதம் 20% நேர்கோட்டு முறையில் எனக் கொண்டு இயந்திரக் கணக்கை தயாரிக்கவும்.

18. What are the merits and demerits of Straight line method of Depreciation?

நேர்கோட்டுத் தேய்மான முறையின் நன்மை தீமைகள் யாவை?

19. Find out Credit Purchases from the following.

	Rs.
Balance of creditors on 1 January	7,600
Return outward	2,400
Cash paid to creditors	20,000
Bills accepted	4,600
Discount allowed by them	500
Balance of creditors on 31st December	9,500

பின்வரும் தகவல்களின்படி கடன் கொள்முதல் கண்டுபிடிக்கவும்.

	ரூ.
1 ஜனவரி தேதியன்று கடனீந்தோர் இருப்பு தொகை	7,600
கொள்முதல் திருப்பம்	2,400
கடனீந்தோருக்கு செலுத்திய ரொக்கம்	20,000
ஏற்பு செய்யப்பட்ட மாற்றுச்சீட்டு (செ.மா.சீட்டு)	4,600
கடனீந்தோரால் வழங்கப்பட்ட நட்டம்	500
31 டிசம்பர் அன்று கடனீந்தோர் இருப்பு	9,500

PART C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

20. From the following Trial Balance prepare the Trading Profit and Loss a/c for the year ended 31st December 2006 and a balance sheet as on that date.

Trial Balance as on 31.12.2006

	Dr. (Rs.)	Cr. (Rs.)
Capital	–	80,000
Sales	–	50,000
Creditors	–	2,000
Bills payable	–	1,000
Discount earned	–	500
Interest Received	–	500

	Dr. (Rs.)	Cr. (Rs.)
Purchase	30,000	
Salaries	4,000	
Rent	3,000	
Wages	2,000	
Insurance	600	
Drawings	10,000	
Machinery	56,000	
Bank	9,000	
Cash	4,000	
Stock (Opening)	10,400	
Debtors	5,000	
	1,34,000	1,34,000

Adjustments :

(a) Closing stock Rs. 10,000

(b) Salaries outstanding Rs. 600/-

(c) Rent paid in advance Rs. 400/-

(d) Depreciate machinery at 10%

(e) Bad debts written off Rs. 500/-

கீழ்க்கண்ட இருப்பு சோதனை பட்டியலிருந்து 31.12.2006 – ல் முடியும் ஆண்டிற்கான வியாபார இலாப நஷ்ட கணக்கினையும், இருப்பு நிலைகுறிப்பையும் தயாரிக்க.

இருப்பு சோதனைப்பட்டியல் 31.12.2006 அன்று

	பற்று ரூ.	வரவு ரூ.
முதல்	–	80,000
விற்பனை	–	50,000
கடனீந்தோர்கள்	–	2,000
செலுத்தற்குரிய மாற்றுசீட்டு	–	1,000
பெற்ற தள்ளுபடி	–	500
வட்டி பெற்றது	–	500
கொள்முதல்	30,000	
சம்பளம்	4,000	
வாடகை	3,000	
கூலி	2,000	
காப்பீட்டு முனைமம்	600	
எடுப்பு	10,000	
பொறிகள்	56,000	

	பற்று	வரவு
	ரூ.	ரூ.
வங்கி	9,000	
ரொக்கம்	4,000	
சரக்கிருப்பு (தொடக்க)	10,400	
கடனாளிகள்	5,000	
	1,34,000	1,34,000

சரிக்கட்டல்கள் :

(அ) இறுதி சரக்கிருப்பு ரூ. 10,000.

(ஆ) கொடுபட வேண்டிய சம்பளம் ரூ. 600.

(இ) முன்கூட்டி செலுத்திய வாடகை ரூ. 400.

(ஈ) பொறிகள் மீது 10% தேய்மானம் ஏற்படுத்துக.

(உ) ரூ. 500 வாரக்கடன் சரி செய்க.

21. From the following Receipts and Payments A/c and Additional Information, Prepare Income and Expenditure A/c and Balance Sheet as on 31.12.1999.

Receipt and Payment Account

	Rs.		Rs.
To Balance b/d	2,000	By wages	4,000
Subscription	14,000	Bats and Ball	6,000
Donation	6,000	Sports equipments	9,000
Entrance fee	2,000	Special subscript expenses	4,000
Interest on FD		Investments	1,000
at 10%	1,000	Furniture	4,000
Sale of cycle	700	Balance c/d	2,000
Special subscription	4,300		
	30,000		30,000

Additional Information :

(a) Capitalise donation, special subscription surplus in full and half of the entrance fee.

(b) Stock of bats and balls on 1.1.99 Rs. 4,000 stock of bats and balls on 31.12.99 Rs. 1,000.

(c) Subscription outstanding on 1.1.99 Rs. 7,000 subscription outstanding on 31.12.99 Rs. 1,000.

(d) The asset on 1.1.1999 were : cycle Rs. 1,000; Ground Rs. 14,000; Furniture Rs. 5,000; Sports equipments Rs. 7,000.

கீழ்க்கண்ட பெறுதல், செலுத்துதல் கணக்கு மற்றும் மேல் விவரங்களின் துணை கொண்டு 31.12.1999 உடன் முடிந்த காலத்திற்கு வருவாய் செலவு கணக்கும், இருப்பு நிலை குறிப்பும் தயாரிக்கவும்.

பெறுதல் செலுத்துதல் கணக்கு

	ரூ.		ரூ.
இருப்பு கீ/கொ	2,000	கூலி	4,000
சந்தா	14,000	பந்து / மட்டை	6,000
நன்கொடை	6,000	விளையாட்டு பொருட்கள்	9,000
நுழைவுக் கட்டணம்	2,000	சிறப்பு சந்தா செலவு	4,000
10% வைப்பின் மீது வட்டி	1,000	முதலீடு	1,000
சைக்கிள் விற்றது	700	அறையணிகள்	4,000
சிறப்பு சந்தா	4,300	இருப்பு கீ/இ	2,000
	30,000		30,000

மேல் விபரங்கள் :

(அ) நன்கொடை; சிறப்பு சந்தா உபரி; முழுமையாகவும், பாதி நுழைவுக் கட்டணமும் மூலதனமாக்கபடவும்.

(ஆ) பந்து மட்டை சரக்கிருப்பு 1.1.99 – ரூ. 4,000, பந்து மட்டை சரக்கிருப்பு 31.12.99 – ரூ. 1,000.

(இ) சந்தா பாக்கி 1.1.1999 அன்று ரூ. 7,000, சந்தா பாக்கி 31.12.1999 அன்று ரூ. 1,000.

(ஈ) 1.1.99 அன்றிருந்த சொத்துக்கள் : சைக்கிள் ரூ. 1,000 மைதானம் ரூ. 14,000, அறையணிகள் ரூ. 5,000 விளையாட்டு பொருட்கள் ரூ. 7,000.

22. Explain the different methods of recording the transactions of goods sent on 'Sale' (or) 'Return' basis.

'விற்பனை' மற்றும் 'திருப்பத்தின்' சரக்குகளின் நடைமுறைகளை பதிவு செய்யும் பல்வேறு முறைகளை விளக்குக.

23. A fire occurred in the premises of X Ltd on 10.10.2007. All stocks were destroyed except to the extent of Rs. 6,200. From the following figures, ascertain the loss suffered by the company.

Stock on 1.1.2006 Rs. 40,000; Purchases during 2006 Rs. 1,45,000. Sales during 2006 Rs. 2,00,000; Stock on 31.12.2006 Rs. 25,000; Purchase during 2007 upto the date of fire Rs. 1,52,200. Sales during 2007 upto date of fire Rs. 1,89,000.

10.10.2007 அன்று X லிமிடெட் வளாகத்தில் தீ பிடித்துக்கொண்டது. ரூ. 6,200 மதிப்புள்ள பொருட்களை தவிர மற்ற அனைத்து சரக்குகளும் அழிந்து போயின. கீழே தரப்பட்டுள்ள விபரங்களிலிருந்து நிகர இழப்பை கணக்கிடுக.

1.1.2006 அன்று சரக்கிருப்பு ரூ. 40,000; 2006–ல் கொள்முதல் ரூ. 1,45,000; 2006ம் ஆண்டிகள் விற்பனை ரூ. 2,00,000. 31.12.2006–ல் சரக்கிருப்பு ரூ. 25,000; 2007–ம் ஆண்டு தீ பிடித்து நாள் வரையிலான கொள்முதல் ரூ. 1,52,200. 2007–ம் ஆண்டு தீ பிடித்து நாள் வரையிலான விற்பனைக்கு ரூ. 1,89,000.

24. X Ltd, bought 10 identical machines each costing Rs. 10,000 on 1.1.2004. Two of the machines were sold on 1.7.2005 for Rs. 12,000. On 1.10.2005 two more machines were bought for Rs. 12,500 each. Two machines from the first lot were sold for Rs. 6,000 each on 1.4.2006. Show machines account on 31.3.2007, if depreciation is provided under diminishing balance method at 10% and accounts are closed on every 31st March.

X லிமிடெட் ஒரே மாதிரியான 10 இயந்திரங்களை ஒவ்வொரு இயந்திரமும் ரூ. 10,000 விலையில் 1.1.2004 அன்று வாங்கியது. 1.7.2005 அன்று இரு இயந்திரங்களை ரூ. 12,000–க்கு விற்றது. ஒவ்வொருன்றும் ரூ. 12,500 விலையில் இரு இயந்திரங்களை 1.10.2005 அன்று வாங்கியது. முதலில் வாங்கிய இயந்திரங்களிலிருந்து ஒவ்வொன்றும் ரூ. 6,000 விலையில் இரு இயந்திரங்களை 1.4.2006 அன்று விற்றது. குறைந்த செல் இருப்பு முறையில் ஒவ்வொரு மார்ச் 31 அன்றும் 10% தேய்மானம் ஒதுக்கிடு செய்வதாக கருதி இயந்திர கணக்கை 31.3.2007 அன்று வரை காட்டவும்.

———————